செ.வெ. எண் 978

12-11-2008

# செய்திக்குறிப்பு

தமிழ்நாடு நாட்டுப்புறக்கலைஞர்கள் நல வாரியத்தின் இரண்டாவது நிர்வாகக் குழுக்கூட்டம் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.என்.சுரேஷ்ராஜன் அவர்கள் தலைமையில் 12.11.2008 அன்று மாலை 3.00 மணியளவில் வாலாஜா சாலையில் உள்ள சுற்றுலாத்துறை அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முனைவர் மூ.இராசாராம், இ.ஆ.ப., ஆணையர், கலை பண்பாட்டுத்துறை, நாட்டுப்புறக்கலைஞர்கள் நல வாரியம், திரு தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அரசு இணை செயலாளர், நிதித்துறை, திரு ச. சத்தியநாதன், செயலாளர், நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம், அரசு துணைச் செயலாளர், சுற்றுலா பண்பாட்டுத்துறை, இயல், இசை, நாடக மன்ற செயலாளர் திரு.இளையபாரதி, நாட்டுப்புற கலைஞர்கள் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்கள் முனைவர்.கரு.அழ..குணசேகரன், கூத்துப்பட்டறை திரு.முத்துசாமி, சிலம்பாட்டக்கலைஞர் திரு.உறாஜி எல். ஜான் பாபா, திரு.இரா.ஜெயா அருள்பதி, திருமதி.சின்னபொன்னுகுமார் மற்றும் கலைஞர்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் ஒய்வூதியத் தொகை ரூ.300/– லிருந்து ரூ.400/– ஆக உயர்த்துதல் குறித்தும்; ஒய்வூதியம் பெற விதிக்கப்பட்டுள்ள வயது வரம்பினை 60 லிருந்து 75 ஆக உயர்த்துதல் குறித்தும்; நாட்டுப்புற கலைஞர்கள் உறுப்பினராக விண்ணப்பித்து ரூ.100/– க்கான இரசீது பெற்ற நாளிலிருந்து அல்லாமல் அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு பதிவு செய்த தேதியிலிருந்து திட்ட உதவிகள் வழங்கலாம் என்பது குறித்து முடிவு செய்தல் குறித்தும்; மற்றும் பல்வேறு நலன்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் கலந்தோசிக்கப்பட்டு எடுத்த முடிவுகள் குறித்து அடுத்த நிர்வாக குழு கூட்டம் கூட்டப்படுவதற்கு முன்னர் படிப்படியாக நிறைவேற்றிட முயற்சிகள் மேற்கொள்ளுமாறு துறை உயரதிகாரிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

(வா. துரை)

சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர்
தலைமைச் செயலகம், சென்னை-600 009

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9